## மதச்சார்பின்மை, ஒன்றிய மாநில உறவுகள்:

# அரசியலமைப்பை மறுஆய்வு செய்க!

## 75ஆவது அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு மாநிலங்களவையில் வைகோ பேச்சு!

புதுடெல்லி, 24 -

நாடாளுமன்ற மாநிலங்களவையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75 ஆவது ஆண்டு கொண்டாட்டம் குறித்த விவாதத்தில் வைகோ அவர்கள் பங்கேற்று உரையாற்றும் போது, "கூட்டாட்சி மதச்சார்பின்மை ஒன்றிய, மாநில உறவுகள் குறித்த அரசியலமைப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் வைகோ அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"'பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விவாதத்தில் பங்கேற்க எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, மாநில அரசுகளை அச்சுறுத்தும் அரசியலமைப்பின் 356 ஆவது பிரிவை நீக்க வலியுறுத்துகிறேன். ஒன்றிய அரசால் இந்தப் பிரிவு அரசியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்தப்பட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை கலைக்க ஒரு கருவியாக இது பயன்படுத்தப்படுகிறது.

### தனிநபர் மசோதா!

அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது, கல்வி மற்றும் விவசாயம் சார்ந்த துறைகள் மாநில பட்டியலில் இருந்தன. துரதிர்ஷ்டவசமாக, நெருக்கடி நிலை காலத்தின் போது, அவை பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டன. அதை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரதனிநபர்மசோதாவை நான் முன்வைத்துள்ளேன்.

ஏப்ரல் 8, 1989 இல் நடைபெற்ற ஆளுநர்கள் மாநாட்டில், நீதிபதி வி. ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள்,

"இந்திய நாட்டில் குழப்பங்கள் செய்ய அவசரப்படுகிற அரசியலமைப்புச் சார்ந்த நிறுவனம் ஒன்று இருக்குமானால் அது ராஜ்பால் அலுவலகம்தான். பல அபாயகரமான சிந்தனைகளைத் தூண்டும் வகையில் இவ்வலுவலக நடைமுறை அமைந்துள்ளது என்றார்.

### அரசியல் சட்டத்திற்கு முரணாக தமிழக ஆளுநர்!

ஆளுநர் பதவிக்கு இழுக்கு ஏற்படும் வகையில் தனக்கு முன் எழும் கேள்விகளுக்கு விடை காண எவரிடமிருந்தும் தகவல்களைக் கோர முடியாது. அவர் அத்தகைய சர்ச்சைகளில் சிக்கினால், கடுமையான விமர்ச னங்களுக்கும் உள்ளாக நேரிடும்.

ஆளுநர், கல்வி அமைச்சகத்தால் வழங்கப்படும் ஆலோசனையைப் பெற்று செயல்படும் வகையிலேயே அரசியல் அமைப்புச் சட்டப்படி, அவர் பல்கலைக் கழக வேந்தராக இருக்கிறார்.

கேள்விகள் எழும் போது அரசு மற்றும் அமைச்சகத்தின் ஆலோசனையின் பேரில்தான் ஆளுநர் செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல், அமைச்சகத்தின் முடிவுக்கு எதிராக, தன்னிச்சையாக செயல்படுவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது. ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழ் நாட்டில் தற்போதைய ஆளுநர் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாகச் செயல்படுகிறார்.

ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் உரிமை என்பது, மறு பரிசீலனைக்கு அனுப்புவது என்பதை விட, தொடர்புடைய அமைச்சகத்திட மிருந்து உரிய தகவல்களை கேட்டுப் பெறுவதாகும். சர்வாதிகாரம் என்பது என்ன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



### ஜனநாயகத்தை புதைக்கும் செயல்!

அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 52இன் படி, இராணுவத்தின் உயரிய கட்டுப்பாடு குடியரசுத் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு குடியரசுத் தலைவரே இராணுவத்திற்கு கட்டளை இட முடியுமா? அப்படி செயல்பட்டால் அது அப்பட்டமான சர்வாதிகாரம் என்பது மட்டுமல்ல, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். அதேபோல் ஆளுநர் மாநில அரசுக்கு எதிராகச் செயல்படுவது அரசியல் கட்டமைப்பை சிதைப்பதாகும்.

### அம்பேத்கர் - கூறிய வரிகள்!

ஆளும் கட்சியில் இருந்து ஒதுக்கப்பட்ட மற்றும் அதிருப்தியடைந்த அரசியல்வாதிகள், ஆளுநர்களாக நியமிக்கப்படுகிறார் கள். அத்தகைய நபர்கள் பதவியில் இருக்கும் போது நடுநிலைமையோடு அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு செயல் படாமல், ஒன்றிய அரசின் முகவர்களாக செயல்பட முனைகின்றனர். இதனால் திறமை, நேர்மை, நடுநிலைமை மற்றும் நிர்வா கத்திறன் ஆகிய பண்புகள் உடைய ஆளுநர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இது டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் கூறிய வரிகள்.

### ஆளுநர்கள் தேர்வு குறித்து அரசியல் நிர்ணய சபையில் ஜவஹர்லால் நேரு கூறியதாவது:

"ஆளுநர் மாகாணத்தின் உள்ளூர் அரசியலுடன் நெருக்கமாக தொடர்பு கொள்ளாமல் இருந்தால் அது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் தனி நபராக, அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும், ஒன்றிய ஆளும் கட்சியின் தொடர்பு இல்லாதவராகவும் இருந்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, அரசியல் கட்சிகளுக்கு தொடர்பில்லாதவர்கள், அரசியலில் ஈடுபடாதவர்கள், சமூகத்தில் முதன்மையானவர்கள் ஆளுநர்களாக இருப்பது பொருத்த மாக இருக்கும். சிறந்த கல்வியாளர்கள், பிற துறைகளில் சிறந்து விளங்குப வர்கள், அரசு விரும்பும் வகை யில் சுறுசுறுப்பாகச் செய ல்படுவார்கள்.

### சர்க்காரியா கமிஷன் பரிந்துரை!

ஆளுநர்களின் சரியான தேர்வை உறுதி செய்வதற்காக, ஜவஹர்லால் நேரு வகுத்துள்ள அளவு கோல்களை மீண்டும் வலியுறுத்துவது சிறப்பான ஒன்றாகக் கருதுகிறேன். ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்திருக்கிறது. அவை,

(1) தன்னுடைய வாழ்க்கையில் புகழ்பெற்றவராக இருக்க வேண்டும்;

(2) மாநிலத்திற்கு வெளியில் இருந்து வந்தவராக இருக்க வேண்டும்;

(3) மாநிலத்தின் உள்ளூர் அரசியலுடன் தொடர் பில்லாத, தனி நபராக இருக்க வேண்டும்; மற்றும்

(4) அவர் அல்லது அவள் அண்மைக் காலத்தில் அரசியலில் அதிகம் பங்கு கொள்ளாத நபராக இருக்க வேண்டும்.

"ஆளுநராக தேர்வு செய்யப்படுபவர் ஒன்றியத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியாக இருந்தால், எதிர்க்கட்சி அல்லது பிற கட்சிகள் ஆளும் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்காமல் இருப்பது நல்லது. இந்த வகையில் ஏதேனும் தவறு இருந்தால், நியமனத்திற்கு முன்பு தொடர்புடைய மாநிலத்தின் முதலமைச் சரால் சுட்டிக்காட்ட ப்படலாம்.

ஆனால் உண்மை நிலை என்னவென்றால் இந்த உன்னதமான பரிந்துரைகள் அனைத்தும் பிரதமரின் செயலகத்தில் உள்ள குப்பைக் கூடைக்குள் சென்று விட்டன.

### ராஜமன்னார் குழு!

ஆளுநரை எப்போதும் மாநில அமைச்சரவையுடன் கலந்தாலோசித்துதான் நியமிக்க வேண்டும் என்று ஆளுநர் நியமனம் குறித்து ராஜமன்னார் குழு தெரிவித்துள்ளது. மேலும் அக்குழு, ஒரு ஆளுநர் மீண்டும் ஆளுநராகவோ அல்லது அரசாங்கத்தின் வேறு எந்த பதவியிலேயோ நியமிக்க தகுதி அற்றவராக ஆக்கப்பட வேண்டும்.

உச்சநீதிமன்றத்தால் தவறான நடத்தை, இயலாமை போன்ற காரணங்கள் நிரூபிக்கப்படாத நிலையில், ஆளுநரை பதவியிலிருந்து நீக்கக் கூடாது.

### ஒன்றிய - மாநில உறவுகள்:

நாம் பிரித்தானிய நாடாளுமன்ற முறையைப் பின்பற்றி உள்ளோம். பிரித்தானிய நாடாளுமன்ற முறையின் அடிப்படைக் கொள்கை வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இந்த அரசியலமைப்பை நமது முன்னோர்கள் உருவாக்கினார்கள். இவை முழுமையான ஒன்றாக இல்லையென்றாலும் அதுதான் கொள்கை. இது மட்டுமே சரியான அரசியலமைப்பு சட்டம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இது நாம் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்புச் சட்டம்.

இமயமலையில் இருந்து கன்னியாகுமரி வரை ஒவ்வொரு பள்ளிவாசலிலும் தொழுகை நடத்தப் படட்டும், நாடு முழுவதும் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் பிரார்த்தனைகள் நடத்தப் படட்டும். அனைத்துக் கோவில்களிலும் பூஜைகள் நடத்தப்படட்டும். குருத்வாராக்கள், புத்தவிகார் மற்றும் ஜெயின் கோவில்களிலும் பிரார்த்தனைகள் நடத்தப் படட்டும். அதே நேரத்தில், பகுத்தறிவுச் சுடர் ஏந்தியவர்களும் எந்தத் தடையும் இன்றி யாரையும் புண்படுத்தாமல் பரப்புரை மேற் கொள்ளலாம். இதுதான் மதச்சார்பின்மையின் உட்கருத்தாகும்.

42 ஆவது திருத்தத்திற்குப் பிறகு, முகவுரை பின்வருமாறு கூறுகிறது:

இந்திய மக்களாகிய நாங்கள், இந்தியாவை ஒரு இறையாண்மை கொண்ட சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக அமைப்பதற்கும், அதன் அனைத்து குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் உறுதி மேற்கொண்டுள்ளோம்: இந்துத்துவ வெறியர்கள் முகவுரையில் உள்ள "சோசலிசம் மற்றும் மதச்சார் பின்மை" என்ற இரண்டு வார்த்தைகளை ஜனநாயக விரோதமான முறையில் நீக்க வேண்டும் என்று முயற்சிக்கின்றார்கள்.

### மாநிலங்களவையில் அண்ணா கூறியது!

1963 இல் ராஜ்ய சபாவில் அறிஞர் அண்ணா கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

"எனக்கு 'தமிழ்' என்ற தொன்மையான மொழி கிடைத்ததை என்னால் மறக்கவே முடியாது. என் முன்னோர்கள் பேசிய, என் தமிழ் அறிஞர்கள் வழங்கிய சொற்பொழிவுகள், நூல்கள் அறிவு இலக்கியங்களைப் பெற்ற அந்த மொழிக்கு ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரை நான் திருப்தி அடைய மாட்டேன்.

அரசமைப்புச் சட்டத்தின் 8 ஆவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் அலுவல் மொழிகளாகக் கருதுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய ஒரு குழுவை அரசு அமைக்க வேண்டும். இது வரை அரசியலமைப்புச் சட்டம் 106 முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சபை விவாதங்களில், அதன் இறுதிக் கட்டத்தில், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர், தனது அறிவார்ந்த கருத்தைத் தெளிவு படுத்தி இருக்கிறார்: "கனடாவைப் போல அரசியலமைப்பைத் திருத்து வதற்கான உரிமையை மக்களுக்கு மறுத்து, இந்தச் சட்டம் இறுதியானது மற்றும் நிலையானது என்றோ அல்லது அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ளது போல் அசாதாரண விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசியலமைப்பின் திருத்தத்தை மேற்கொள்ளலாம் என்று இல்லாமல், இந்திய அரசியலமைப்பை திருத்துவதற்கான மிக எளிதான நடைமுறையை வழங்கியுள்ளது".

அது மட்டுமல்ல. வரவிருக்கும் சூழ்நிலையையும், சவால்களையும் அவர் தெளிவுபடுத்தி இருக்கிறார். எனவே, அரசியலமைப்பைத் திருத்துவதற்கு கடினமான நடைமுறையை அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடவில்லை.

"அமெரிக்க அரசியலமைப்பை உருவாக்குவதில் பெரும் பங்காற்றிய சிறந்த அமெரிக்க அரசியல் வாதியான ஜெபர்சன், அரசியலமைப்பை உருவாக் கியவர்கள் ஒருபோதும் புறக்கணிக்க முடியாத சில முக்கியமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். அவர் கூறியதாவது:

"ஒவ்வொரு தலைமுறையையும் தனித்தனி தேசமாகக் கருதுவோம், பெரும்பான்மையினரின் விருப்பப்படி, தங்களைப் பிணைத்துக் கொள்ள உரிமை உள்ளது, ஆனால் அடுத்த தலைமுறை இவர்களின் விருப்பப்படி பிணைக்க முடியாது."

### கூட்டாட்சி அமைப்பு:

இன்று எழுத்திலும், உணர்விலும், நமது அரசியலமைப்பு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு அல்ல. இது கூட்டாட்சியோ, ஒற்றையாட்சியோ அல்ல. சிலர் அதை அரைகுறை கூட்டாட்சி என்று அழைக்கிறார்கள். நான் இங்கே கார்ல் ஜே. ஃபிரெட்ரிக்சை மேற்கோள் காட்டுகிறேன்:

"பொதுவாக, செயல்பாட்டுக் கருத்தாய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் இடத்தில் பரவலாக்கம் குறிக்க ப்படுகிறது என்று கூறலாம்.அதே சமயம் சமூகங்கள் கூட்டாட்சி அமைப்பைக் கோருகிறது."

இது "கோட்பாடு மற்றும் நடை முறையில் கூட்டாட்சியின் போக்குகள்", பக். 67 இல் உள்ள கார்ல் ஜே. ஃபிரெட்ரிக்சின் மேற்கோள்.

ஒன்றியமாநில உறவுகள் குறித்து சர்க்காரியா கமிஷன் அளித்த பல்வேறு பரிந்துரைகளையும், ராஜமன்னார் குழு அறிக்கை போன்றவற்றையும் கருத்தில் கொண்டு, அரசியலமைப்பை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு வைகோ அவர்கள் உரையாற்றினார்.




# கண்ணீர் அஞ்சலி...

புதுக்கோட்டை மாநகராட்சி மேயர்

திருமதி திலகவதி செந்தில்குமார்

அவர்களின் கணவர்

தி.மு.க. மாநகரச் செயலாளர்

ஆ.செந்தில் (எ) செந்தில்குமார்

அவர்கள் 23.12.2024 அன்று இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் நாளை 24.12.2024 அன்று காலை 9 மணியளவில் அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்...

K.K.செல்லபாண்டியன் M.Com., BL.,

மாவட்ட கழக செயலாளர்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க

KTR 9944007370